முருகனே துணை

# சிவகாசி
# சிவசுப்பிரமணியக்கடவுள்மீது
# பதிகம்.

சுத்தப் பதிப்பு



விலை அணா 2

இஃது
சிவகாசி ஸ்ரீமான்
தா. ச. சின்னக்கனி நாடாரவர்களின்
மாணாக்கர்களிலொருவரும்
ஷெயூர் வெற்றி விநாயகர் கோயிற் பாடசாலை
உபாத்தியாயரும் ஆகிய
மகா ௱-௱-ஸ்ரீ
மா. கு. வை சுப்பைய நாடாரவர்கள்
இயற்றியது.

விருதுபட்டி,
...ச்சிதானந்த அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப் பெற்றது.
1921

1208
19 SEP
இ2க்: 388:2M9SSV
N21
N0322

உ

முருகனே துணை

# சாற்றுக் கவிகள்

சிவகாசி.

ஸ்ரீமான். தா, சங்கணநாடாரவர்கள் குமாரரும்.

இந்நூலாசிரியற் காசிரியருமாகிய.

**மகா-ள-ள-ஸ்ரீ சின்னக்கனி நாடார் அவர்களால்**

இயற்றியவை.

முனந்தரங் கப்பயவுததி முளைத் தெழுபார்க்
கவியுடன் பாமுதல் வியாகு
மனந்தரங் கட்டுறவு செயுஞ் சிவகாசிப் பதிமுருக
னாறு முகன் மொய்க்கும்.
வனந்தரங் கந்தாசுரத்திலணிந்து வைத்த
சௌரிதிரு மருமான் மிக்கச்
சினந்தரங்க வரஞ்செயும் வேல் விடுத்தவுணர்
குலமனைத்துஞ் சிதையக் கோறும்.

மைந்தனாகிய குகற்குச் சப்பய நாவலன் பதிகம்
வழுத்தக் கேட்டுக்
கந்தனலாகும் வரையிதற்கிணை நாற்றிசை
துருவக் கஞ்சதானன்
சந்தனுடை வியினமுஞ் சாந்தக்காதுந் தரிக்குஞ்
சார் பினைய
சிந்தனாகிய முனியுமனைத்த வனைப் பயங்கொண்டு
திரிகின்றனல்

சிவகாசி

ஸ்ரீமான். நா, கா, பெ, சங்கரலிங்க நாடார் அவர்கள் குமாரர்

**மகா-ள-ள-ஸ்ரீ காளியப்ப நாடார் அவர்களால்**

இயற்றியது.

மருமலியஞ் செறுத்தலையிற் கனைதோட்டு
முழுத்தியர் தம்வதனப் போதை

# சிவசுப்பிரமணியக் கடவுள் மீது பதிகம்

யுருமதி யென்றாக்காம் பற்பகன் மலருஞ்
சிவகாசி யூரிற் பாய்மாச்
சருமவுடைதரித்த பிரான்றனக் கழுங்காக்
குடிலை சொற்ற சாமிக்கன்பா
யருமகி ழுற்றனந்தனு மெச்சிடப் பதிகஞ்
சுப்பய மாலறைந் திட்டானால்.

சிவகாசி.

இந்து எலிமெண்டரிஸ்கூல் தலைமையுபாத்தியாயரும்
இந்நூலாசிரிய ரோடுகல்வி பயின்றவரும் ஆகிய

## ஸ்ரீமான் K சர்க்கரைப் புலவரவர்களியற்றியவை.

கட்டளைக் கலித்துறை

கஞ்சம்பதி சுரிகந்துயிர்த் தின்றிடுங் காமர்முத்தை
யஞ்சம்பள்கில் சினையென்றிவர்ந் திறகாலணைக்கும்
விஞ்சம்பணைவளஞ் சேர்சிவகாசியில் வீற்றிருக்குஞ்
செஞ்சம் பருளிய சேய்மீதிலன் புடன் செப்பினனே

வெண்பா.

பதிகமுருக்கிதழ்வாய் பாகுமொழிமா
பதிகமுளத்தினை சைபார்த்தே—யதிகமுறத்
தென்பயில்ச டோற்பவனோர் தெள்ளுதமிழாய்ந்த
இன்பமிகு சுப்பயமாலை.

விருதுபட்டி.

## ஸ்ரீமான் இராமலிங்கக் குருக்கள் அவர்கள் இயற்றியது.

வெண்பா.

தேன்மருவுஞ்சோலைச் சிவகாசியம் பதிவாழ்
மான்மருகன் வள்ளிமணாளன்மேல் நான்மருவு
தோத்திரப்பாச் செந்தமிழாற் சொற்றான் சுப்பையகவிப்
[illegible] பாப்பரிந்து.

சாற்[illegible]விகள் முற்றிற்று

உ

முருகனே துணை

# சிவசுப்பிரமணியக்கடவுள் மீதுபதிகம்.

## காப்பு

மாசிவகாசிக் கழகு வாய்ந்த வடவீதிவளர்
தேசிக வேலாயுதன் மேற்றோர்ந்து பெருங்—காசினியி
னந்தாத்தமிழ்ப் பதிக நாட்டவெற்றி ஜயங்கரனே
தந்தான் வனச மலர்த்தாள்.

## நூல்

இந்தார் நதிச்சடாடவிய னருள் பாலகா
வேளைக் கிரங்குமுருகா
இப்புவியி லுற்பவித்திது காறும்யான் புரிந்
திட்டபவ மொன்று கூடி
வந்தூற மெய்யினிற் புக்கியே சிரசுகண்
வலி பொறுத்திட வொணாதுன்
மாமலர்ப்பாத வருணாடியே கூவினேன்
வச்ராவடி வேற்குமானே
நந்தா தமாலின்மருகா நவிரவாகரு
ஞானகுருசாமி யிதுவே
நல்லசமயங் கருணைவைத்தெனைக்கா குமர
நாதனே வேதமுதலே
செந்தூ துளங்கனி நிகர்த்த வாய்த்திருமகள்
சிறந்தெந்த நாளுமேவுஞ்
சிவகாசி மாநகரில் வடவீதிவாழ்கின்ற
சிவசுப்ரமணிய தேவே (1)

சண்முகசடாக்கரா தந்தை குருவேயமரர்
தங்களைக் காத்தவரதா
தானென்றவாணவமதாற் கொடியபாவமெல்லாஞ்
சகமதிற் செய்தவென்னைக்
கண்வலியுடன் சிரசுநோய்களிரு காலமுங்
கடுகளவு நேரமேனுங்
காலியில்லா துயிரை வாட்டினுலேதாபிக
கடையனேன் யார்க்குரைப்பேன்

# சிவசுப்பிரமணியக் கடவுள் மீது பதிகம்

விண்முகினிறத்தன் மருகாவுனக்கிணையலால்
வேறுதுணையேது புவிமேல்
வேண்டினேனுண்டருள விதுநல்லசமயம் வடி
வேலவா கிருபை செய்வாய்
திண்மதிலெழுந்து மதிமண்டல முறப்புதிய
சேணுறும் போற்றலங்குஞ்
சிவகாசி மாநகரில் வடவீதிவாழ்கின்ற
சிவசுப்ரமணியதேவே (2)

தன்னெண்ணமானபடி யமருக்கின்னல்செய்
தாரகன் முதற்சூரரைச்
சங்கரித்திந்திரற் கவிர் கனகநாட்டையுந்
தந்த பன்னிருகை முருகா
என்னென்ன பிழைகளையான்செய்யினும் பொறுத்
தெனதுகண் சிரசுவலியு
மிப்பவே தீர்த்தெனைக் காட்கொள்ள வேண்டு நீ
யேழை பங்காளனன்றோ
பொன்னன்னமீதில் வருபிரமனைச்சிறையினிற்
போக்கிப்பின் மீட்கவில்லையோ
புத்தியில்லாத சிறு பித்தன்மீதித்தனை
பொல்லாத கோபமேனோ
தென்வண்ணு பொதியைமலை முனிகுருபராபசிய
தெங்குமா கதலிமலியுஞ்
சிவகாசிமாநகரில் வடவீதிவாழ்கின்ற
சிவசுப்ரமணியதேவே (3)

நாவலவனு மருணகிரிதனக் கழியாத
ஞானவுபதேசமருளி
நல்லசந்தப் பனுவல்சொல்ல வைத்தெஞ்ஞான்று
நன்குவாழ் வித்தகுகனே
கோவலனுவந்த மருகா கடைக்கண்ணருள்
தொடுத்தெனையடுத்தாவா வா
கூற்றனையுதைத்த சிவனருட்பாலகா
குஞ்சரமுகற் கனுசனே

பூவலமதாயொரு கணத்தினிற் சுற்றிவரு
புள்ளிமயிலேறுபுனிதா
போதமறியேனுனது பாதமலர் தஞ்சமிப்
போது கண்ணேறுதீர்ப்பாய்
சேவலையுயர்த்த கொடியாயமரர் காவலா
சித்திரப் போர்க்குமமையாச்
சிவகாசிமாநகரில் வடவீதிவாழ்கின்ற
சிவசுப்ரமணியதேவே (1)

ஆவணக்காப்பக
சென்னை-600 008.

தான்பெற்ற மைந்தனொருகோடி பிழைசெய்தினுந்
தந்தையவன் வெறுத்தவர்கண்மேற்
சாபமாவது கொடிய தண்டனைகளாவதுஞ்
சாதிப்பதுண்டு கொல்லோ
நானுற்ற மைந்தனலவோ வுனக்கெந்தனை
நரகவே தனையுளாக்கல்
ஞாயமோ மாமாயனுக்கருமை மருகனே
ஞானவானந்தமணியே
கூனுற்றமரமதை வளர்ப்பவர்கள் சிறிதிலக்
கோணலை நிமிர்க்கும் வகைபோற்
கொடிய பாதகனுலகிலறியாது செய்தபிழை
கொண்டுநீ திருத்தொணாதோ
தேனுற்றநீபமலர் மாலையணி மார்பவிவன்
சிரசுகண்ணேறு தீர்ப்பாய்
சிவகாசிமாநகரில் வடவீதிவாழ்கின்ற
சிவசுப்ரமணியதேவே (5)

செங்கைக்கமைந்த வடிவேலெடுத்த சூரரைச்
சின்னபின்னங்களாக்கித்
தேவர் சேனைபதியெனப் பெயர்கொளுங்குமர
தேசிகா வடிவனுந்தன்
றுங்கத்திருந் தாளிணைக்கு மலர்சாற்றிடத்
துட்டரொடு கூடியென்றுந்
தூயபஞ்சாக்கர சடாக்கர முறைக்கிடுந்
தொண்டரை யிகழ்ந்து நிந்தித்

துங்கைவரு தோஷ பாசத்தினிற் சிக்கிமா
துன்பத் துழந்து வேளைத்
தாக்கி வினைநீக்கியுறு கிரக கன்மேனவையுந்
தானறத் தீருமையா
தெங்கிக் கம்பைமா பனசமொடு செந்நெற்
செழித்தமுப் போகம்விளையுஞ்
சிவகாசிமாநகரில வடவீதிவாழ்கின்ற
சிவசுப்ரமணியதேவே (6)

தந்தைதாய் குருவிய சாத்திர முணர்ந்த நற்
சற்சனர்கள் சொற்கடந்து
தான்கற்றகலையதிக வான்பெற்றதென்றகந்
தன்னிலே மமதைகொண்டு
எந்தவேளையிலும் வெறிகொண்டுமாபாதக
மியற்றலே தொழில்களன்றி
யிரம் வைத்துன்னிரு பதாம்புயந்தொழுதிடா
தேதங்கள் செய்துகெட்டே
னென்னைமுருகா சிறியனறியாது செய்தபிழை
யேற்பதுன்பாரமையா
யேனைக்கிரங்கு கிருபாகரா கருணைவைத்
தெனது கன்மேனுவதிரச்
சிந்தைக்குளன்பு வைத்தருள் புரிகுவாய்தரி
செண்டாடு பரியுலாவுஞ்
சிவகாசிமாநகரில் வடவீதிவாழ்கின்ற
சிவசுப்ரமணியதேவே (7)

கல்லாதபாவி யருளில்லாத பாவியுன்
கழலிணை மறந்தபாவி
கள்ளுண்டெழுந்து வெறியாலெந்த நேரமுங்
கன்மவினையே புரிந்த
பொல்லாத பாவிபன்மாதர் சுகம்வேண்டிப்பொய்
யொழுக்கை வைத்தபாவி
போதமென்பது சிறிதுமறியாதபாவி புன்
புல்லறிவான பாவி

நல்லார் தமைச்சிறிது மதியாத கங்கார
　　நாயெனச் சிறு பாவி
நானல்ல தில்லையாயினு மகாமோது கார்
　　நளிர் கடற் புவியின் மீது
செல்லாய் வணத்தன் மருகா பிழை பொறுத்தெனது
　　சிரசு கண்ணோவு தீர்ப்பாய்
சிவகாசி மாநகரில் வடவீதி வாழ்கின்ற
　　சிவசுப்ரமணிய தேவே (8)

சரவணபவாவென் றுரைத்திலேன் போற்றிலேன்
　　சற்றுமுள்ளன் புதைத்துன்
சன்னிதியினின்றிருகை கூப்பிமுறையிட்டிலேன்
　　சர்வசங்கார வடிவேற்
கரவணவெனப்பா விசைத்திலே னறிவிலாக்
　　கசடருறவாலொவலதென்
காலபலமேற வெறியனாகியறி வின்றியுன்
　　கழலிணை மறந்தனேனும்
வரகுணநிறைந்த குமரா பொறுத்தாட்கொள்ளு
　　மாட்சிமை யுனக்கல்லவோ
மைந்தனெனில்லையோ தந்தை நீயல்லவோ
　　வரைராசன் மாதுதருபுத்
திரவணப்பசிய மயின்மீ தெழுந்தெனது கண்
　　சிரசு நோய் தீர்க்கவருவாய்
சிவகாசிமாநகரில் வடவீதிவாழ்கின்ற
　　சிவசுப்ரமணியதேவே (9)

கறையடிகளொட்டு நிலை கெட்டு விட்டோடிடக்
　　காக்கின்ற வெண்மார்பாறக்
கனமுகடுடைபடக் காரளிமேலிமுன்
　　கர்ச்சித்து வந்தயமனை

மறைமுடியினடனமிடு பாதாம்புயத்தினால்
வாட்டித் தலத்தில்வீழ்த்தி
வந்தித்தமாமறைச் சிறுவனுக்கெஞ்ஞான்றும்
வயதுபதினாறுதந்த
விறைதரு சடானனனல்லவோ குமர
வெற்குறுங்கண்ணேவிட
னேற்றதலை நோயையுந் தீர்த்திட லுனக்குமோர்
செட்டினைப் போதின்முடியுஞ்
சிறையளிகளென்னிடு கடம்பணிபுயாசலா
சித்தம் வைத்தாதரிப்பாய்
சிவகாசிமாநகரில் வடவீதிவாழ்கின்ற
சிவசுப்ரமணியதேவே (10)

---

வாழி

ஆறுமாமுகனும் மயிலுங்கொடி
வேறுவாரணமு மெழின்மஞ்ஞையும்
வீறுசெந்தமிழும் வியன்பூமியுஞ்
சேறுசேரித்திருச் சிவகாசியும்
அந்தமில்லெழுத் தாறுமவைகளில்
சந்தமேவுதமிழ்ப் புலவோர்களு
மிந்தநூலு மிசைப்படித்தோர்களு
மெந்தநாளுமிசை பெறவாழியே

முற்றுப்பெற்றது.

சிவசுப்பிரமணியக்கடவுள் திருவடிகளே சரணம்.

170322